**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.1925/ஆ5/2025, நாள். 02.05.2025**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – மாணவர்கள் பாதுகாப்பு – குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தடுப்பு நடவடிக்கைகள் – அரசாணைகள், பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் – அனைத்து வகை பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்துதல் – உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 121, பள்ளிக் கல்வி (இ1) துறை, நாள். 17.05.2012
2. அரசாணை (1D) எண். 83, பள்ளிக் கல்வி (ERT) துறை, நாள். 17.06.2021
3. அரசாணை (Ms) எண். 89, பள்ளிக் கல்வி (GL1(2)) துறை, நாள். 03.04.2025
4. அரசுக் கடித எண். Efile 1649/பொது 1(2),2025–1, பள்ளிக் கல்வித் துறை, நாள். 26.03.2025
5. Crl. A(MD) No. 316 of 2022 order dated 19.03.2024 Before the Madurai Bench of Madras High Court
6. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018655/எம்2/இ1/2025, நாள். 16.04.2025
7. தூத்துக்குடி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.4266/ஆ2/2018, நாள். 22.03.2025
8. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.018655/எம்2/இ1/2025, நாள். 25.04.2025

•••••

பார்வை 8–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், பள்ளிக் கல்வித் துறை சார்ந்த கல்வி நிறுவனங்களில் போக்சோ வழக்குகளின் தற்போதைய நிலை குறித்த விவரங்களை தொகுக்கவும், துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், தேவையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் / பயிற்சிகள் வழங்குவதை கண்காணிக்கவும், சம்பந்தப்பட்ட துறை தொடர்பு அலுவலர்களாக மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) கூடுதல் தொடர்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சார்ந்து கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பாலியல் குற்றம் சார்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவான வழிமுறைகள் பார்வை 1 முதல் 3 வரை உள்ள அரசாணைகளில் அரசால் வெளியிடப்பட்டுள்ளது, பார்வை 4–ல் காணும் கடிதம் மூலம் அரசால் தற்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் சார்ந்து அறிவுறுத்தல்கள் மற்றும் பாலியல் குறித்த சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்ககூடாது என்பதில் அரசு மிகவும் உறுதியாக இருப்பதால் பார்வை 8–ன் படி பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி செயல்படுமாறும் இதில் ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மேலும் பள்ளியில் உள்ள சூழலை மாணவர்களுக்கு பாதுகாப்பாக உள்ளதை உறுதி செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பார்வை 1 முதல் 3 வரை உள்ள அரசாணைகள், பார்வை 4-ன் அரசுக் கடிதம் மற்றும் பார்வை 8-ன்படி பெறப்பட்ட செயல்முறைகள் கடிதம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் கடிதத்தினை இவ்வலுவலக ஆ5 பிரிவில் நேரில் ஒப்படைக்க வேண்டும்.

அனைத்து வகை தொடக்க / நடுநிலைப் பள்ளிகள் பொறுத்தவரை மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) பள்ளி தலைமையாசியர்களிடமிருந்து ஒப்புதல் கடிதத்தினை பெற்று இவ்லுவலகத்தில் தவறாமல் ஒப்படைக்க வேண்டும்.

அனைத்து வகை தனியார் பள்ளிகள் பொறுத்தவரை மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) பள்ளி முதல்வர்களிடமிருந்து இருந்து ஒப்புதல் கடிதத்தினை பெற்று இவ்லுவலகத்தில் தவறாமல் ஒப்படைக்க வேண்டும்.

அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் ஒப்புதல் கடிதத்தினை இவ்வலுவலக ஆ5 பிரிவில் நேரில் தவறாமல் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு -

1. பார்வை 1 முதல் 3 வரை உள்ள அரசாணைகள்
2. பார்வை 4-ன் அரசுக் கடிதம்
3. பார்வை 8-ன் செயல்முறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   வேலூர் மாவட்டம்.

நகல்-
சென்னை -6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.